SriLankan Airlines

oneworld

**துறைமுகங்கள், கப்பல்துறை மற்றும் விமான சேவைகள் அமைச்சு**

ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் லிமிடெட், பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம், கட்டுநாயக்க, இலங்கை

**கொள்வனவு இலக்கம் : ENG/ALC/RFP/23/028**

**ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் லிமிடெட் நிறுவனத்தினால்(SLA) ஒரு (01) சிறிய பருமனைக் கொண்ட விமானத்திற்கான செயல்பாட்டு குத்தகை முன்மொழிவுகளுக்கான கோரிக்கை**

துறைமுகங்கள், கப்பல்துறை மற்றும் விமான சேவைகள் அமைச்சின் அமைச்சரவையால் நியமிக்கப்பட்ட நிலையியல் கொள்முதல் குழுவின் தலைவரால், ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் சார்பாக, 2023 மே 22 ஆம் திகதி முதல் அந்தந்த **'முன்மொழிவுக்கான கோரிக்கை (ஆர்.எ.்.ப்.பி)'** இல் வரையறுக்கப்பட்டுள்ளவாறு, தகுதியான மற்றும் தகுதிவாய்ந்த ஏலதாரர்களிடமிருந்து பொருத்தமான விமானங்களை இயக்குவதற்கு குத்தகை அடிப்படையில் வழங்குவதற்காக ஏலங்கள் கோரப்படுகின்றன. **'முன்மொழிவுக்கான கோரிக்கை (ஆர்.எ.்.ப்.பி)'** தொடர்பான விடயங்கள் இலங்கை விமான நிறுவனத்தின் உத்தியோகபூர்வ வலைத்தளத்தில் (**https://www.srilankan.com/en_uk/corporate/tender-notices**) காணப்படுகின்றன.

சர்வதேச போட்டி ஏல (ஐசிபி) கொள்வனவு முறையினூடாக இலங்கை அரசாங்கத்தின் கொள்வனவு வழிகாட்டல்களுக்கமைய ஏலச் செயற்பாடு நடாத்தப்படும். சாத்தியமான விமானத்தை குத்தகைக்கு விடுவதற்காக சட்டபூர்வ உரிமைகளைக் கொண்ட அனைத்து ஆர்வமுள்ள தகுதிவாய்ந்த ஏலதாரர்களும், ஆர்.எ.்.ப்.பி. குறியீடான (ENG/ALC/RFP/23/028) என்பதைக் குறிப்பிட்டு 2023 ஜூன் 12 ஆம் திகதி இலங்கை நேரம் (GMT + 0530) 1400 மணிக்கு முன்பதாக **asset@srilankan.com** எனும் பாதுகாப்பான மின்னஞ்சல் முகவரிக்கு மின்னஞ்சல் செய்வதன்மூலம் தங்கள் ஏலங்களைச் சமர்ப்பிக்கலாம்.

ஆர்.எ.்.ப்.பி. யுடன் இணைக்கப்பட்டுள்ள ஏல ஒப்புகைப் படிவம் பூர்த்தி செய்யப்பட்டு, முறையாக கையொப்பமிடப்பட்டு **rfpinfo@srilankan.com** எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும். ஆர்.எ.்.ப்.பி. பற்றிய ஏதேனும் விசாரணைகள் அல்லது தெளிவுபடுத்தல்களை 2023 ஜூன் 07 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் **rfpinfo@srilankan.com** எனும் அதே மின்னஞ்சல் முகவரி ஊடாகத் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ள முடியும்.

உரிய ஆர்.எ.்.ப்.பி. உடன் பின்னிணைப்பு மூலம் குறிப்பிடப்படாவிட்டால், ஏலங்கள் 2023 ஜூன் 12 ஆம் அன்று இலங்கை நேரப்படி (GMT + 0530) 1415 மணிக்கு இலத்திரனியல் முறையில் திறக்கப்படும். தாமதமான ஏலங்கள் நிராகரிக்கப்படும். ஏல திறப்பு நிகழ்வில் பங்கேற்க விரும்பும் தரப்பினர் ஏல திறப்பு திகதிக்கு ஏழு (7) நாட்களுக்கு முன்னர் **rfpinfo@srilankan.com** எனும் மின்னஞ்சல் முகவரிக்கு மின்னஞ்சல் செய்வதன் மூலம் தமது விருப்பத்தைத் தெரிவிக்க வேண்டும்.

ஆர்.எ.்.ப்.பி. தொடர்பாக ஏதேனும் திருத்தங்கள் / அறிவித்தல்கள் இருப்பின் அவை SLA இன் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் காணப்படும்.

**தலைவர்**
**அமைச்சரவையால் நியமிக்கப்பட்ட பெறுகைக் குழு**
**துறைமுகங்கள், கப்பல்துறை மற்றும் விமான சேவைகள் அமைச்சு**
**இலக்கம் 19, சைத்திய வீதி, கொழும்பு 01, இலங்கை.**